பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 16 | செவ்வாய்க்கிழமை | 30.01.2024 | அதிர்வு 182

## முல்லை இளைஞரின் சடலம் ஒதுங்கியது

முல்லைத்தீவு – மாத்தளன் கடலில் நேற்று முன்தினம் குளிக்கப் போன சமயம் காணாமல் போன குடும்பஸ்தரின் சடலம் நேற்றுப் பிற்பகல் முல்லைதீவு சாலை கடற்கரை பகுதியில் கரை ஒதுங்கி 06



# பாதாள உலகத்தவர்களுடன் அரசியல்வாதிகளும் சகவாசம்

## விசனத்துடன் சுட்டுகிறார் அஸ்கிரிய மகாநாயக்கர் அவர்களும் குற்றங்களுக்குப் பொறுப்பு என்கிறார்

கண்டி, ஜனவரி 30

பாதாள உலக நடவடிக்கைகள் உட்பட பல்வேறு சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடும் பலர் அரசியல்வாதிகளின் சகவாசத்தில் இருக்கின்றமையால் அவர்களின் சமூக விரோதச் செயல்கள் தொடர்பான பொறுப்பில் இருந்து அரசியல்வாதிகளை விடுவிக்க முடியாது என அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வண. வரகாகொட ஸ்ரீஞானரத்ன தேரர் தெரிவித்துள்ளார். 06

## குருநகரிலிருந்து கடற்றொழிலுக்கு சென்ற இளைஞரைக் காணவில்லை



ப்பாணம் குருநகர் பகுதியிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இச் சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த ஜோசப் மக்சிமஸ் சுரேஷ்குமார் (வயது 32) என்ற இளைஞரே காணாமல் போயுள்ளார்.

இந்த இளைஞன் மேலும் இருவருடன் குருநகரிலிருந்து படகில் கடற்றொழிலுக்குச் 06



'கலரிக்கு பேசுதல்' அல்லது 'கலரிக்கு விளையாடுதல்' என்ற ஒரு பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

'கலரி' என்பது பார்வையாளர் கூடம். நாடாளுமன்றத்திலும் கூட பார்வையாளர் மாடத்தை அல்லது வரிசையை கலரி என்று அழைப்பர். உரிய விடயத்தை, உரிய தரப்புக்கு என்று பேசாமல், பார்வையாளர் தரப்பிடம் கைதட்டல் – அப்ளாஸ் – வாங்குவதற்காக பேசுவதை இப்படி கலரிக்கு பேசுதல் 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# சந்திரிகாவின் தலைமையில் புதிய கூட்டணி: வெற்றிலைக்குப் பதிலாகக் கதிரைச் சின்னம்



**முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க தலைமையில் புதிய கூட்டணியை ஸ்தாபிப்பது தொடர்பில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.**

**விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத் தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர இந் தத் தகவலை வெளியிட்டுள்ளார்.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு பதிலாக இந்தப் புதிய கூட்டணி அமைக்கப்படவுள்ளது என அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

புதிய கூட்டணியின் சின்னமாக வெற்றிலைக்கு பதிலாக கதிரையை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

1994 இல் கதிரைச் சின்னத்துடன் அமைக்கப்பட்ட பொதுமக்கள் முன்னணி மூலமாகவே பொதுத் தேர்தலில் வென்று அரசியலில் உச்சத்துக்கு சந்திரிகா வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஏற்றுமதி வருமானம் 2023 இல் வீழ்ச்சி!



கடந்த வருடத்தில் ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

அந்த சபை விடுத்துள்ள அறிக்கையில், கடந்த வருடத்தில் 14.94 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானமாக கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டை விடவும் ஏற்றுமதி வருமானம் கடந்த வருடத்தில் 0.39 சதவீதமான வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை குறிப்பிட்டுள்ளது.

# கொழும்பில் இன்று பெரும் போராட்டம்



பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இன்று கொழும்பில் மாபெரும் கண்டன ஊர்வலம் மற்றும் பொதுக் கூட்டம் ஆகியவற்றை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக நடத்தப்படும் இந்தப் போராட்டத்தில் ஐம்பதாயிரம் பேர் திரள்வர் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

இலங்கையில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு உட்பட பல பிரச்சினைகளை முன்னிறுத்தி இது நடத்தப்படுகின்றது.

போராட்டம் மற்றும் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் இன்று கடைசி நேரத்தில் அறிவிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

# நுளம்பு வலை இறுகியதால் புத்தளத்தில் சிறுவன் பலி!



**(ரஸீன் ரஸ்மின)**

புத்தளம் – வில்லுவ வத்தை பகுதியில் நுளம்பு வலை நூல் இறுகி சிறுவன் ஒருவன் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளான்.

புத்தளம் – அநுராதபுரம் வீதியில் உள்ள வில்லுவ வத்தை பகுதியைச் சேர்ந்த மல்லவ ஆராச்சிலாகே உபேக்ஸ் தீபமால் எனும் 12 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நோய்களிலிருந்த குறித்த சிறுவன் நேற்றிரவு வீட்டில் உள்ள கட்டிலில் விளையாடிக் கொண்டிருந்த போது , அங்கு தொங்கிக் கொண்டிருந்த நுளம்பு வலையொன்றின் நூல் பகுதி சிறுவனின் கழுத்தில் இறுக்கியாதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விளையாடிக் கொண்டிருந்த சிறுவனின் சத்தமில்லாததை அவதானித்த பெற்றோர்கள் , வீட்டின் படுக்கை அறைக்குச் சென்று பார்த்த போது அங்கு சிறுவன் கழுத்து இறுகி கிடப்பதை பார்த்து உடனடியாக உறவினர்கள், அயலவர்களின் உதவியோடு புத்தளம் தள வைத்தியசாலைக்கு சிறுவனைக் கொண்டு சென்றனர்.

எனினும் சிறுவன் ஏற்கனவே உயிரிழந்து விட்டான் எனப் பரிசோதனை செய்த வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிசாம், மரண விசாரணையை நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின்னர், கழுத்துப் பகுதி இறுகியமையால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்து சடலத்தை பெற்றோரிடம் ஒப்படைத்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# இலங்கைக்கு 75 புதிய நிபந்தனைகள் சர்வதேச நாணய நிதியம் வழங்கியது

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கிய பிணையெடுப்புப் பொதியின், இரண்டாவது மதிப்பாய்வுக்கு முன்னதாக நிறைவேற்ற வேண்டிய 75 புதிய நிபந்தனைகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது என "வெரிட்டே ரிசேர்ச்" ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்ற வேண்டியிருந்த 27 நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கான திகதிகளை மாற்றம் செய்ய அல்லது நீடிக்க சர்வதேச நாணய நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

நவம்பர் மாத இறுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய 73 நிபந்தனைகளில் 60 நிபந்தனைகளை இலங்கை நிறைவேற்றியுள்ளது எனவும் நிறைவேற்றப்படாத 13 நிபந்தனைகளில் 8 நிபந்தனைகள் முன்னோக்கி நகர்த்தப்பட்டுள்ளன என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

மீதமுள்ள 5 வாக்குறுதிகள் நிறைவேற்ற முடியாத பொறுப்புகள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, 75 புதிய நிபந்தனைகளுடன், கடந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய 27 நிபந்தனைகளும், நவம்பர் இறுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய 8 நிபந்தனைகளுமாக, தற்போது 110 நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது மதிப்பாய்வு தொடங்குவதற்கு முன்னதாக இலங்கை நிறைவேற்ற வேண்டியுள்ளதாக வெரிட்டே ரிசேர்ச் ஆய்வு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# வேட்டையில் பன்றி என நினைத்து தந்தையைச் சுட்டுக் கொன்ற மகன்



தெதிகம ஜயலத் கந்த பிரதேசத்தில் காட்டுப்பன்றி வேட்டைக்கு தந்தையும் மகனும் சென்றுள்ள நிலையில் தந்தை துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

மகன் தவறுதலாக மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் தந்தை உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முந்தினம் இரவு வேட்டையாடச் சென்ற வேளையில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மகன் சுட்டதில் தந்தை தலையில் பலத்த காயம் அடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

டபிள்யூ.சம்பத் என்ற 47 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். அவரது 17 வயது மகனே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

தந்தையும் மகனும் காட்டுப்பன்றியை சுற்றிவளைக்க இரு பக்கமாக சென்றுள்ள நிலையில் மகன் சுட்டதில் தந்தையின் தலையில் குண்டு பாய்ந்துள்ளது.

பின்னர், தனது தவறினால் தந்தை உயிரிழந்ததை அறிந்த மகன் உறவினர் ஒருவருடன் பொலிஸில் வந்து சரணடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# ஐஸ் போதைப் பொருளுடன் வவுனியாவில் பெண் கைது!

(கே.வசந்தன்)

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் வைத்து ஐஸ் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் வசிக்கும் பெண் ஒருவர் ஐஸ் போதைப் பொருளை விற்று வருகிறார் என மடுக்கந்தை பகுதியில் நிலை கொண்டுள்ள விசேட அதிரடிப் படையினருக்குத் தகவல் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. அந்தப் பெண் வேப்பங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நகரப் பகுதி நோக்கி ஐஸ் போதைப் பொருளுடன் மோட்டார் சைக்கிளில் வந்த சமயம் வைரவபுளியங்குளம், ரயில் நிலைய வீதியில் வைத்து விசேட அதிரடிப்படையினர் அந்தப் பெண்ணை வழிமறித்து சோதனை செய்தனர். அப்போது ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டது. அந்தப் பெண்ணை விசேட அதிரடிப் படையினர் கைது செய்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அந்தப் பெண்ணிடம் இருந்து 920 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவராவார். மேலதிக விசாரணைகளின் பின் அவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# சுதந்திர தினத்திற்காக கொழும்பில் ஒத்திகை இன்று முதல் விசேட போக்குவரத்து ஒழுங்கு



இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கான ஒத்திகை நடவடிக்கைகளுக்காக கொழும்பில் விசேட போக்குவரத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இன்று முதல் எதிர்வரும் 4ஆம் திகதிவரை இந்தப் போக்குவரத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, காலி வீதியின் சில பகுதிகள் மூடப்படவுள்ளன எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி, காலி வீதியின் கொள்ளுப்பிட்டி சந்தி முதல் காலி முகத்திடல் வரையான பகுதியும், செரமிக் சந்தியிலிருந்து காலி முகத்திடல் வரையிலான பகுதியும், பல கட்டங்களின் கீழ் இன்று முதல் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதிவரை மூடப்படவுள்ளன.

# மாணவர்களுக்கான காலணி வவுச்சரின் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டது



பாடசாலை மாணவர்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் காலணி வவுச்சரின் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மேற்படி வவுச்சரின் செலுப்படியாகும் தன்மை எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதியுடன் காலாவதியாகவிருந்தது.

இந்த நிலையில், இந்த பாடசாலை காலணி வவுச்சர்களின் செல்லுபடியாகும் காலம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# ஈழத் தமிழர்களுக்காகத் தீக்குளித்த முத்துக்குமாரின் 15ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில்!

-எஸ்.நிதர்ஷன்-

ஈழத் தமிழர்களுக்காகத் தமிழகத்தில் தீக்குளித்து உயிர் நீத்த ஈகைப் போராளி முத்துக்குமாரின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் கொக்குவிலில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன் போது முத்துக்குமாரின் திருவுருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து பொதுச் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இவ் நினைவேந்தல் நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஈழத்தமிழ் மக்கள் கொத்து கொத்தாக கொல்லப்பட்டு கொண்டிருந்த நேரத்தில் ஈழ மக்களைக் காக்குமாறு கோரி தமிழ்நாட்டில் முத்துகுமார் தீக்குளித்து உயிர்நீத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று கூறுவர்.

யாருக்கு, எத்தகைய விதத்தில், எந்தப் பாணியில் பேச வேண்டும் என்பதில் பல சமயங்களில் முறை, தலைகள் இருக்கும். அதை விட்டுவிட்டு, வெளியில் பொதுமக்களிடம் ஏதோ வெட்டிப் பிடுங்கி விட்டவர் போல பாவ்லா காட்டுவதற்காக வீர உரை நிகழ்த்துவதில் அர்த்தமில்லை.

இந்தப் பீடிகை எல்லாம் எதற்கு என்று நீங்கள் கேட்பது புரிகின்றது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு பின்னர் இப்போது விடுவிக்கப்பட்டிருக்கும் சாந்தன், முருகன், றொபட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வரையும் இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தமிழரசின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடிதம் எழுதி இருக்கின்றமையையும், அது பற்றிய செய்தி ஊடகங்களில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றமையையும் பார்த்துதான் இத்தனை பீடிகையும்.

இந்தக் கடிதம் எழுதிய விவகாரமும் கலரிக்கு விளையாடுதல் விடயமாகவே எனக்குப் பட்டது.

மேற்படி நால்வரும் இலங்கையர்கள். இப்போது இந்திய நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டவர்கள். அவர்கள் தாய் நாடு திரும்புவதை இந்தியா மறுக்க - தடுக்க - முடியாது. அதற்கு முகாந்திரமும் இல்லை.

1.அவர்களின் இலங்கை மீளுகை தொடர்பான விடயம் குடிவரவு, குடியகல்வு விவகாரம் ஆகும். அது மாநில அரசுடனோ, தமிழக முதல்வருடனோ சம்பந்தப்பட்டது அல்ல. இந்திய மத்திய அரசுக்கு - அல்லது தமிழகத்தில் இப்போதைய பாவனையின்படி ஒன்றிய அரசுக்கு - உரிய விவகாரம். அது தொடர்பில் தமிழக அரசுக்கோ, தமிழக முதல்வருக்கோ கடிதம் எழுதி ஆகப்போவது ஒன்றும் இல்லை. மாநில அரசின் கைகளில் இவ்விடயத்தில் எதுவுமே இல்லை.

2. குறைந்தபட்சம் மாநிலத்தில் அதிகாரத்தில் இருக்கும் அரசு, மத்தியில் ஆட்சியில் இருக்கும் ஒன்றிய அரசுடன் அரசியல் கூட்டு வைத்திருந்தாலாவது அந்தக் கூட்டின் அடிப்படையில் தமிழக முதல்வர் தனது அரசியல் உறவு தொடர்பான செல்வாக்கின் அடிப்படையில் ஒன்றிய (மத்திய)அரசை இயக்கி ஏதும் செய்ய முயற்சிக்கலாம். ஆனால் மாநிலத்திலும் மத்தியிலும் ஆட்சியில் இருக்கும் தி.மு.கவும் பாரதிய ஜனதாவும் எதிரும் புதிருமான துருவங்கள். அப்படி இருக்கையில் இவ்விடயத்தில் தமிழக முதல்வருக்குக் கடிதம் எழுதி, அதனை ஊடகங்களில் பகிர்வது கலரிக்கு விளையாடும் 'ஷொட்'தான்.

3. இந்திய மத்திய அரசு விரும்பினால் கூட, அவர்களை இலங்கைக்கு அனுப்புவதில் சிக்கல் உண்டு. அவர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு செல்லுபடியான பயண ஆவணம் - கடவுச்சீட்டு - அவசரகால கடவுச் சான்றிதழ் - ஏதேனும் ஒன்று தேவை. அவர்கள் நால்வரும் இலங்கையர்கள். ஆதலால், அவர்களுக்கு அத்தகைய பயண ஆவணங்கள் ஒன்றை வழங்குவதற்கு சென்னையிலோ, புதுடில்லியிலோ உள்ள இலங்கைத் தூதரகம் தயார் இல்லை என்பது தான் இதில் ஒரே பிரச்சினை.

4. அத்தகைய பயண ஆவணத்தை நால்வருக்கும் வழங்கும் முடிவை கொழும்பில் உள்ள குடிவரவு, குடியகல்வு திணைக்களம்தான் முன்னெடுக்க வேண்டும். அப்படியானால் இவ்விடயத்தை - நால்வருக்கும் இலங்கைக்கு வருவதற்கான பயண ஆவணங்களை அவர்களுக்கு வழங்குவதற்கு - கொழும்பு அரசு, பாதுகாப்பு அமைச்சு, பொதுப் பாதுகாப்பு அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சுடன்தான் விடயங்களை நகர்த்த வேண்டும். இந்த மூன்று அமைச்சுக்களுக்கும் பொறுப்பான அமைச்சர்களுடன் தான் பேச வேண்டும். காய் நகர்த்த வேண்டும். நால்வருக்கும் உரிய பயண ஆவணங்களைக் கொழும்பு வழங்குமானால், அடுத்த நாளே அவர்கள் தமது தாயகம் திரும்பி விட முடியும். அப்படி அவர்கள் தாயகம் திரும்புவதை கட்டுப்படுத்த - தடுக்க - இந்தியத் தரப்பில் எந்த முகாந்திரமும் இல்லை.

5.ஆகவே கொழும்புக்கு எழுதி, தொடர்ந்து அழுத்தம் கொடுத்து, காய் நகர்த்த வேண்டிய விடயத்தை, அவ்விவகாரத்தில் அதிகம் தொடர்பில்லாத தமிழக முதல்வருக்கு எழுதி, அதை செய்தியாக்குக்குவதில் அர்த்தமில்லை. அப்படி எழுதுவது கலரிக்கு விளையாடுவதாகவே அர்த்தம் பண்ணப்படும்.

6. கடைசியாக இவ்விடயத்தில் ஒரு கொசுறுத் தகவல். உள்வீட்டுத் தகவல் என்றும் சொல்லலாம்.

ஏழு, எட்டு மாதங்களுக்கு முன்னர் வடமராட்சியில் உள்ள மேற்படி நால்வரில் ஒருவரான சாந்தனின் தாயாரையும் சகோதரர் மதி சுதாவையும் அவர்களின் இல்லத்துக்குச் சென்று சுமந்திரனை எம்.பி. சந்தித்து நீண்ட நேரம் இவ்விடயம் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடினார். அதன் பின்னர் அவர்கள் சார்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரில் பேசினார் சுமந்திரன். மேற்படி நால்வரும் கடவுச்சீட்டு இல்லாதமையால் தமது தாய் நாடு திரும்ப முடியாமல் இருக்கின்றார்கள், அவர்களுக்கு அவற்றை வழங்குவதற்கு உத்தரவிடுங்கள் என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார் சுமந்திரன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்தக் கோரிக்கையைப் பரிவுடன் செவிமடுத்தார். ஆனால் கடவுச்சீட்டு வழங்க நடவடிக்கை எடுப்பேன் என்று அவர் உறுதிமொழி தரவில்லை. இந்த நால்வரும் தாயகம் மீண்டால் அதை ஒட்டி தென்னிலங்கையில் எழக் கூடிய அரசியல் அதிர்வுகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிந்தித்திருப்பார். அதனால்தான் கடவுச்சீட்டு வழங்குவது தொடர்பான உறுதிமொழியை அவர் தரவில்லை என்று சுமந்திரன் கருதுகின்றார். அந்த நால்வருக்கும் கடவுச்சீட்டு வழங்கும்படியான கோரிக்கை நியாயமானது. சட்ட ரீதியானது. தார்மீக அடிப்படையானது. அதனால் அகோரிக்கையை ஜனாதிபதியால் நேரடியாக மறுக்க முடியவில்லை என்று சுமந்திரன் எண்ணுகின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை அரசியல்வானில் வீண் குழப்பங்களைத் தவிர்க்க விரும்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த நால்வரும் உடனடியாக நாடு திரும்புவது தேவையற்ற அரசியல் சர்ச்சைகளை உருவாக்கும் எனக் கருதுகின்றார் போலும். அதனால் தேர்தல் முடியும் வரை இது விடயத்தில் தீர்க்கமான முடிவு ஏதும் எடுக்காமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இழுத்தடிப்பார் என்றே கருதப்படுகின்றது.

எனினும் சிறீதரன் இப்போது தமிழரசுக் கட்சிக்குத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றார். அந்தப் பதவி நிலை பலிசோடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து, மேற்படி நால்வருக்குமான இலங்கைக் கடவுச்சீட்டுகளை வழங்கும்படி அவர் வலியுறுத்திப் பார்க்கலாம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இது தொடர்பாக எழுதும் கடிதத்தையே அவர் ஊடகங்களுக்கு வெளியிட்டு, அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கக் கோரியிருக்க வேண்டும். அதுதான் சரியான முறைமை.

## முல்லை இளைஞரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளது.

புதுக்குடியிருப்பு, பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த இராசதுரை கஸ்தூரன் என்ற33 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கரை ஒதுங்கிய உடலத்தினை மீட்கும் நடவடிக்கையில் நேற்று மாலை கிராம சேவையாளர் மற்றும் பொலிஸார் ஈடுபட்டனர்.சம்பவம் தொடர்பாக முல்லைத் தீவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பாதாள உலகத்தவர்க..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுக் கண்டி, பொல்கொல்ல பிரதேசத்திலுள்ள அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்குப் பாடசாலைப் புத்தகங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மகாநாயக்க தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

நாட்டை போதைப்பொருளில் இருந்து விடுவிப்பதற்காக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் விசேட அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர். அந்த முயற்சியைப் பூர்த்தி செய்து முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அனைவரினதும் ஆதரவும் அவர்களுக்குத் தேவை எனவும் அவர் வலியுறுத்தினார்.

சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களில் பெரும்பான்மையானவர்கள் சமயக் கல்வி கற்காதவர்களும், துறவிகளின் சகவாசம் பெறாதவர்களும் என்றும், இன்று வாரத்திற்கு இருமுறைக மாத்திரமே பாடசாலைகளில் பௌத்தம் கற்பிக்கப்படுவதாகவும், பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்புவதில் ஆர்வம் காட்ட வேண்டும் எனவும் மகாநாயக்க தேரர் மேலும் தெரிவித்தார்.

## குருநகரிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சென்றுள்ளார்.

கடலில் படகில் தங்கி தொழிலில் ஈடுபட்ட நிலையில், இரவு மூவரும் படகினுள் நித்திரைக்குச் சென்றுள்ளனர். காலையில் எழுந்து பார்த்தபோது அதில் இருந்த இளைஞன் காணாமல் போயுள்ளார்.

அதனையடுத்து, இருவரும் கடலில் தேடி இளைஞரை காணாத நிலையில், கரை திரும்பி ஏனைய கடற்தொழிலாளர்களுக்கும் அறிவித்து பின்னர், மேலதிக படகுகளுடன் கடற்றொழிலாளர்கள் கடலில்சென்றுதேடியும்,இளைஞரைக்கண்டு பிடிக்க முடியவில்லை.

இந்நிலையில் இளைஞர் காணாமல் போன விடயம் தொடர்பில் கடற்றொழில் நீரியல் வளத்துறை, பொலிஸார்,கடற்படையினர் உள்ளிட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

CLICK HERE VIDEO



# 31 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் இளைஞர் மன்னாரில் நேற்றுக் கைது

**(மன்னார் நிருபர்)**

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சௌத்பார் பகுதியில் கைவிடப்பட்ட அட்டை பண்ணை ஒன்றில் இருந்து 31 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் நேற்றுத் திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பிரகாரம் மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபாலவின் பணிப்புரைக்கு அமைவாக, பொலிஸ் அத்தியட்சகர் ஹாரத்தின் ஆலோசனையின் பெயரில் மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி சில்வா தலைமையிலான குழுவினர் சௌத்பார் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 31 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

போதை மாத்திரைகளுடன் ஏற்கனவே 8 இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சௌத்பார் பகுதியில் போதை மாத்திரைகள் விற்க முற்பட்ட இளைஞர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அந்த இளைஞனிடன் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் சௌத்பார் ரயில் நிலையப் பகுதி அருகில் கைவிடப்பட்ட அட்டை பண்ணை கொட்டில் ஒன்றிலே சூட்சுமமான முறையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 31 ஆயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபரை கைப்பற்றப்பட்ட போதை மாத்திரைகளுடன் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஆஜர் படுத்தப்படுத்தியுள்ளனர்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசியலில் கீரியும் பாம்பும்

ஜனாதிபதித் தேர்தல் நெருங்க நெருங்க, நாட்டில் புதிய புதிய அரசியல் கூட்டணிகள் எல்லாம் உருவாகத் தொடங்குகின்றன. எதிரும் புதிருமாக நின்றவர்கள் கூட தத்தமது அரசியல் இருப்பைத் தக்க வைப்பதற்காக ஓரணியில் கூட்டு சேர விழைகின்றார்கள்.

இதனைத் தென்னிலங்கை ஆங்கிலப் பத்திரிகை ஒன்று பேச்சு வழக்கு மொழியில் ஒப்பீடு செய்திருக்கின்றது.

கீரியும் நாகப்பாம்பும் இயற்கை எதிரிகள். பெருவெள்ளம் போன்ற பேராபத்து நேரும்போது அவை தமக்கு இடையேயான சண்டையை நிறுத்திவிட்டு, மிதக்கும் எதையாவது ஒன்றாகப் பற்றி கொண்டு, சமநிலை அழிந்து விடாமல் இருக்க தங்களுக்குள் இணக்கம் பேணித் தப்ப முயலும் என்று நமது நாட்டில் பொதுவாக ஊர்களில் கூறப்படுவதுண்டு. நமது அரசியல்வாதிகள் பலரும் கூட இப்போது தமக்கு ஏற்பட்டுள்ள பெரு நெடுக்கடியில் இருந்து - பொதுமக்களின் கோப வெள்ளச் சீற்றத்தில் இருந்து - தங்களைக் காப்பதற்காக தங்களுக்குள் உள்ள எதிரித் தன்மையை மறந்து, ஒன்று பட்டு நிற்கின்றார்கள் என்று அப்பத்திரிகை கூறுகின்றது.

உண்மைதான். புதிது புதிதாக உருவாகும் கூட்டுக்கள் பலவும் அப்படியான எண்ணத்தைத்தான் தருகின்றன.

2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டுவதற்குப் பின்புலத்தில் உழைத்தவர்களில் ஒருவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. ஆனால் தேர்தலில் வெற்றியீட்டி, அதனைப் பயன்படுத்தி சுதந்திரக் கட்சியின் தலைமையையும் கைப்பற்றிக் கொண்ட மைத்திரிபால சிறிசேன, அதன் பின் எல்லோரையும் புறமொதுக்கி, உதாசீனப்படுத்தி, தூக்கியெறிந்து நடந்தார். சந்திரிகாவையும் செல்லாக் காசாக்கிச் செயல்பட்டார். அதனால் இருவருக்கும் இடையில் முரண்பாடுகள் வெடித்தன. சுதந்திரக் கட்சியை அடியோடு அழித்தவர் மைத்திரி என்று கட்சியின் மீது குடும்ப ரீதியான பாத்தியத்தைக் கொண்டிருந்த சந்திரிகா வைது கொண்டு இருந்தார்.

இப்போது மீண்டும் தேர்தல் நெருங்கும் சமயம். 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில்' இருக்கும் சுதந்திரக் கட்சி தன்னைச் சரியாக இம்முறை நிலைநிறுத்தாமல் விட்டால் அது அரசியலில் காணாமலேயே போய் விடும் என்பது திண்ணம்.

பொது மக்களின் கோப வெள்ளத்தை எதிர்கொள்வதற்காகக் கீரியும் பாம்புமாக இருந்த சந்திரிகாவும் மைத்திரிபால சிறிசேனவும் தங்களுக்குள் உள்ள வேறுபாடுகளை மறந்து, ஒதுக்கி வைத்துவிட்டு, ஓர் அணியில் இணைந்து செயல்படத் தயாராகி விட்டனர்.

2011 இல் நீர்கொழும்பில் நிமல் லான்ஸாவின் பிரதேசத்தை விசேட அதிரடிப் படையினர் சுற்றி வளைத்த போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உடனடியாகத் தலையிட்டு விசேட அதிரடிப்படையினரை விலக்கினார். அது மட்டுமல்ல, நிமல் லான்ஸாவைச் சமாளிப்பதற்காக உடனடியாக விசேட ஹெலிக்கொப்டர் எடுத்துக்கொண்டு கொழும்பிலிருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், அவரின் ஆலோசகரும், சகோதரரும், அமைச்சருமான பஸில் ராஜபக்ஷவும் நீர்கொழும்புக்கு நேரில் பறந்து சென்றனர். நிமல் லான்ஸாவை வாரிக் கட்டி அணைத்து, அவரைத் தாஜா செய்தனர். அச்சமயம் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதனை 'நீர்கொழும்பு நாடகம்' என்று விமர்சித்து, எள்ளி நகையாடியிருந்தார்.

கடைசியில் இப்போது என்ன நடக்கின்றது? ராஜபக்ஷக்களின் மொட்டுக் கட்சிப் பட்டியலில் நாடாளுமன்றுக்கு வந்து, கோட்டாபயவின் காலத்தில் அவருக்கு பக்கத்தில் நின்று பணிவிடை புரிந்த நிமல் லான்ஸா இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்காக புதுக் கூட்டணி அமைக்கின்றார். ராஜபக்ஷக்களின் மொட்டுக் கூட்டணியில் இருந்து தாம் வெளியேறியமை மட்டுமல்லாமல், ஏனைய பலரையும் அங்கிருந்து உடைத்துப் பிரித்து ரணில் பக்கம் இழுக்க முயல்கின்றார். ராஜபக்ஷக்களை மோசமாக வைகின்றார்.

அன்று ராஜபக்ஷக்களின் நீர் கொழும்பு நாடகத்தில் பிரதான நடிகர் எனத் தாம் வர்ணித்த நிமல் லான்ஸாவைத் தனக்கான அரசியல் கூட்டணியை அமைப்பதற்கு களத்தில் இறக்கியிருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

முன்னர் கீரியும் பாம்புமாக இருந்தவர்கள் மக்களின் கோப வெள்ளத்துக்குப் பயந்து ஒரு மேடையில் ஏற முயற்சிக்கின்றார்கள்.

இந்த போக்கில் பார்த்தால் இலங்கை அரசியலில் கீரியும் பாம்புமாக இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸாவும் கூட தேர்தல் நெருக்கடியை சமாளிப்பதற்காக ஒரு மேடையில் ஒன்றாகத் தோன்றி, அரசியலில் பயணிப்பதற்கு முயன்றால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்பதுதான் நிலைமை.

## பத்து வருடங்களுக்கும் மேலாக

# தனிநபர் ஆக்கிரமிப்பில் இருந்த பொது வீதி வவுனியா நகரசபையினால் அதிரடியாக மீட்பு

(கே.வசந்தன்)

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக தனிநபரின் ஆக்கிரமிப்பில் இருந்த வீதி ஒன்று வவுனியா நகரசபையால் மீட்கப்பட்டுள்ளது. அந்த நபருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் நகரசபை செயலாளர் இ.தயாபரன் நேற்று தெரிவித்துள்ளார்.

வவுனியா, திருநாவற்குளம், கிராம அபிவிருத்திச் சங்க வீதியின் இரண்டாம் ஒழுங்கையின் ஒரு பகுதி தனி நபர் ஒருவரினால் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வழி மறிக்கப்பட்டு கொட்டகை அமைத்து ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக நகரசபைக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் வவுனியா நகரசபையின் செயலாளரால் அந்தத் தனிநபருக்கு அறிவித்தல் வழங்கியும் அந்நபரால் அந்த வீதி பொதுமக்கள் பாவனைக்கு வழங்கப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து நகரசபையினர் அதிரடியாகச் செயல்பட்டு பொலிஸாரின் துணையுடன் அந்த வீதியில் தனிநபரால் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கொட்டகையை அகற்றி, அக்கொட்டகைய்சி நகரசபையினர் கையகப்படுத்தி உள்ளனர்.

அத்துடன் அந்தத் தனிநபருக்கு எதிராக வழக்கும் தாக்கலும் செய்யப்பட்டுள்ளது. நகரசபை செயலாளரின் இந்த செயல்பாட்டிற்கு அப்பகுதி மக்கள் பெரும் வரவேற்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.








# ஆலய வங்கிக் கணக்கிலே நிதி சேமிப்பதல்ல எமது நோக்கம்!

## சமூகத்திற்கு இயன்ற தர்ம காரியங்களைச் செய்வதே தங்கள் இலக்கு என விளக்குகிறார் ஆறு.திருமுருகன்







(ந.லோகதயாளன்)

ஆலய வங்கிக் கணக்கிலே பணத்தைச் சேமித்து வைத்து, வங்கிப் புத்தகங்களை பார்த்து பெருமை கொள்பவர்கள் அல்லர் நாங்கள் எனத் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

தெல்லிப்பளையில் அமைக்கப்பட்ட துர்க்காதேவி வீட்டுத் திட்ட திறப்பு விழாவில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாம் வாழுகின்ற நமது சமூகத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் எனச் சிந்தித்துச் செயலாற்றி வருகின்றோம். அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி எங்களை நல்ல முறையில் ஆற்றுப்படுத்திய காரணத்தால் எங்களுடைய சிந்தனை முழுவதும் தர்ம காரியம் செய்வதிலே தான் அக்கறையாக இருகின்றது.

பம்பலப்பிட்டி சரவஸ்வதி மண்டபத்திலே யோகர் சுவாமிகள் தினம் ஒன்றிலே நான் உரையாற்றி முடிந்ததும், இலங்கை மத்திய வங்கியிலே பணியாற்றிய ஒருவர் என்னை வந்து சந்தித்தித்து,

அதன்போது தெல்லிப்பளை ரயில் பாதை அருகில் 40 பரப்பு காணி உள்ளது, உங்களிடம் இந்தக் காணியை ஒப்படைத்தால் ஏதாவது தர்ம காரியத்திற்குப் பயன்படுத்துவீர்களா என என்னிடம் கேட்டார்.

எங்களிடம் ஒப்படையுங்கள் எங்களுடைய இல்லப் பிள்ளைகள் திருமணமாகி இல்லற வாழ்வில் இணையும் போது அவர்களுக்கென்று ஒரு வீட்டை வழங்க வேண்டும் என்ற எண்ணம் எங்களிடம் உள்ளது. பெற்றோரை, உறவு களை தெரியாமல் சிறு வயது தொடக்கம் எங்களுடன் வளர்ந்த பிள்ளைகளுக்கு நாங்கள் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல எண்ணம் உள்ளது. அதனால் உங்களுடைய இந்தக் காணியை எங்களிம் ஒப்படையுங்கள் எனப் பணிவுடன் தெரிவித்தேன்.

எனது கோரிக்கையை ஏற்று அடுத்த வாரமே இந்தக் காணியினை எங்களிடம் அவர் ஒப்படைத்தார்.

மிகவும் பற்றையாகவும் எல்லைகள் எது என்று தெரியமாலும் இருந்த இந்தக் காணியை சிறந்த முறையிலே துப்புரவு செய்து எல்லைப்படுத்தி தூய்மையாக வைத்திருந்தோம்.

இந்தக் காணியை நாங்கள் பெற்றுக் கொண்டுள்ளோம் என அறிந்த சுங்கத்திணைக்களத்தின் பொன்னையா நீங்கள் பெற்றுக் கொண்ட காணிக்கு அருகில்தான் எனது காணியும் உள்ளது, அதனையும் நான் தருகின்றேன், ஏதாவது தர்ம காரியத்திற்கு பயன்படுத்துங்கள் எனத் தனது காணியையும் எங்களிடம் ஒப்படைத்ததார்.

இவற்றில் முதல்கட்டமாக பொண்னையா எங்களிடம் ஒப்படைத்த காணியில் எங்கள் இல்லப்பிள்ளைகளுக்கு 6 வீடுகளைக் கட்டி இல்லற வாழ்வில் இணையும் போது ஒப்படைத்தோம்.

அதன் பின்பு மேலும் மூன்று வீடுகளைக் கட்டி இல்லற வாழ்வில் இணைந்த எமது இல்லப் பிள்ளைகளுக்கு ஒப்படைத்துள்ளோம்.

மேலும் 4 புதிய வீடுகளைத் தற்பொழுது கட்டி எமது அன்பான இல்லப் பிள்ளைகளுக்கு இவற்றை ஒப்படைக்க வுள்ளோம்.

தமது உறவுகள் யார் என்று கூடத் தெரியாமல் சிறு வயது தொடக்கம் எங்களிடம் வளர்ந்த எங்கள் பிள்ளைகளை இல்லற வாழ்வில் இணையும் போது ஒன்றும் இல்லாமல் வெறுங்கையுடன் அனுப்பி வைக்க எங்களுக்கு மனம் இடம் தரவில்லை.

“நான் தெல்லிப்பழை தூக்கா தேவியின் நிழலில் வளர்ந்தனான், வெறுங்கையோடு திருமணமாகி சென்றேன்“ என ஒரு பிள்ளையும் மனம் கலங்கி ஏங்கக் கூடாது என்ற சிந்தனை எனது மனதில் ஆழமாக பதிந்தது.

இதனால் எங்கள் இல்லப் பிள்ளைகள் குறைவின்றி இல்லற வாழ்வில் இணைய வேண்டும் என்று நாங்கள் இந்த வீட்டுத் திட்டப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றோம்.



வீட்டுத் திட்ட பணிகளை நாங்கள் ஆரம்பிக்கும் போது பணத்திற்கு என்ன செய்வீர்கள் எனப் பலரும் கேட்டார்கள். அம்பாள் ஏதாவது ஒரு வழி காட்டுவாள் என்று நம்பினேன். அதுபோலவே எங்கள் தர்ம காரியங்களுக்கு எங்கள் நாட்டிலும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற எங்கள் அன்னையின் பக்தர்களும் எங்களுக்குத் தாமாக முன்வந்து உதவுகின்றார்கள்.

எங்கள் பணிகளை அவர்கள் நேரடியாக

11

# பகிடிவதைக் குற்றம் நிரூபிக்கப்பட்டால் பன்னிரு ஆண்டுகள் சிறைத் தண்டனை

## உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தகவல்



**“பகிடிவதைகள் தொடர்பான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், சந்தேகநபர் ஒருவருக்கு சுமார் 12 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளன.”**

**- இவ்வாறு உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

”கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த நிலையில் ஒரு லட்சத்து 66 ஆயிரத்து 998 பேர் இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு தகுதிப்பெற்றிருந்தனர். அவர்களில் 84 ஆயிரத்து 150 பேர் பல்கலைக்கழகங்களுக்கான அனுமதிக்காக விண்ணப்பித்திருந்தனர்.

இந்தநிலையில், அவர்களில் 43 ஆயிரத்து 101 பேர் இந்த முறை பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

வரலாற்றில் முதன்முறையாக பல்கலைக்கழகங்களுக்கு தெரிவானவர்களின் எண்ணிக்கை இந்த வருடத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் புதிய மாணவர்களை இலக்கு வைத்து புரியப்படும் பகிடிவதைகள் தொடர்பில் சட்டரீதியான கவனம் செலுத்தப்படும்.

கடந்த வருடத்தில் கிடைக்கப்பெற்ற 80 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பகிடிவதையுடன் தொடர்புடையனவாக கருத முடியாது.

அதேநேரம், பகிடிவதை தொடர்பான முறைப்பாடுகளுக்கு சுமார் 12 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கப்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

எனவே, பல்கலைக்கழக மாணவர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை உரிய வகையில் பயன்படுத்த வேண்டும் என்பதுடன் எதிர்கால நலனைச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.” – என்றார்.

## ஆலய வங்கிக் கணக்கில்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி..)

வந்து பார்வையிட்டு மனமுவந்து உதவி செய்கின்றார்கள்.

இன்று யாழ்பாணம், கண்டி, கொழும்பு மட்டக்களப்பு, மொறட்டுவ எனப் பல பல்கலைக்கழகங்களில் எங்கள் பிள்ளைகள் படிக்கின்றார்கள். ஏனைய சாதாரண பிள்ளைகளைப் போலவே எங்கள் பிள்ளைகளும் கல்வி கற்க நாங்கள் சகல உதவிகளையும் செய்கின்றோம்.

சிந்தனை எனது மனதில் ஆழமாக ஊறிக் கொண்டது.

எங்களுக்கு அப்பாற்பட்ட எங்கள் அம்பாளின் சக்தி எங்களை இயக்குகின்றது. அதன் வழி நடந்து நாங்கள் தர்ம காரியங்களை செய்து வருகின்றோம்.

எங்கள் தர்ம காரியங்களை சரிவர உணர்ந்தவர்கள் எங்களுக்கு அம்பாளின் பெருங் கருணையால் ஏதோ ஒருவகையில் உதவுகின்றார்கள்.

இல்லப் பிள்ளைகளுக்கு கட்டப்பட்டுள்ள இந்த வீட்டுத் திட்டத்திலே ஒரு சிறிய விளையாட்டு மைதானத்தை அமைக்க





இது போன்ற தர்ம காரியங்களை பார்த்து பொறாமைப் படக்கூடாது. இது போல இன்னும் இன்னும் பல தர்ம காரியங்களை செய்ய வேண்டும் என்று மனதிலே அனைவருக்கும் ஊக்கம் வர வேண்டும்.

அன்னை சிவத்தமிழ் செல்வியிடம் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் ஒருமுறை கேட்டார், “உங்களுக்கு பின்பு இந்தப் பணிகளை யார் செய்வது?“ என. அதற்கு அம்மா அவர்கள் “எனக்கு அருகில் இருக்கும் திருமுருகனிடம் கேளுங்கள்!“ எனப் பதில் சொன்னார்.

எனக்குப் பெரிய பொறுப்பு இருந்தது. அன்னையின் பணிகளை குறைவின்றி முன்னெடுக்க வேண்டும் என்ற வேண்டும் என்ற எண்ணம் எங்களும் உள்ளது. அதற்கும் எங்கள் அன்னை யாரோ ஒருவர் மூலம் எங்களுக்கு உதவி செய்வாள் என்ற நம்பிக்கை உள்ளது.

எங்கள் பணி அனைத்தும் நமது சமூகத்திற்கு எங்களால் முடிந்த தர்ம காரியங்களை செய்வதுதான். ஆலய வங்கி கணக்கிலே பணத்தை நிரப்பி வைத்து விட்டு நான் தலைவர், நான் செயலாளர், நான் பொருளாளர் என நமக்கு நாமே பெருமை பேசிக் கொள்வதில்லை.

அன்னை சிவத்தமிழ் செல்வி காட்டிய வழியில் எங்கள் அம்பாளின் ஆசியுடன் எங்கள் தர்ம காரியங்கள் தொடரும். – என்றார்.

# நான் ஆட்சிக்கு வந்தால் சி.எஸ்.கேவில் 11 வீரர்களும் தமிழர்கள் மட்டும்தான்

## சீமான் அதிரடி அறிவிப்பு



“தமிழகத்தில் நாம் தமிழர் கட்சி ஆட்சிக்கு வந்தால், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில், தமிழர்கள் மட்டுமே விளையாடுவார்கள்.”

– இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பார் சீமான் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கட்சி தொடங்கிய காலத்தில் இருந்து, எவரோடும் சமரசம் இல்லை, எவரோடும் கூட்டணியும் இல்லை. நோட்டுக்கும், சீட்டுக்கும் எவரோடும் பேரமில்லை. சாவோ, வாழ்வோ தனித்து தான். வெற்றியோ, தோல்வியோ தனித்துதான்.

ஒத்தையடி பாதையில்தான் செல்வேன். 8 வழி சாலையில் செல்வது தி.மு.க, பி.ஜே.பி. தான். சி.எஸ்.கேனு ஒரு கிரிக்கெட் அணி இருக்கிறது. அதுல, ஒருத்தர் கூட தமிழர் கிடையாது.

நாம் ஆட்சிக்கு வந்தால், 11 வீரர்களும் தமிழனாகதான் இருப்பான், உங்க அண்ணனும் வந்து விளையாடுவேன்.” – என்றார்.

சீமானின் இந்த கருத்து தொடர்பில் இணையவாசிகள் தொடங்கி கிரிக்கெட் ஆர்வலர்கள் வரை விமர்சனம் செய்து வருகின்றனர்.

இந்தியன் பிரீமியர் லீக் எனப்படும் ஐ.பி.எல். தனியார் அமைப்பு மூலம் நடைபெறும் கிரிக்கெட் போட்டியாகும். இதில் தமிழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தியே சி.எஸ்.கே. அணி விளையாடுகிறது.

எனினும் இதில் தமிழ் வீரர்கள் விளையாடவில்லை. இது பேசுபொருளாகவே உள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் தமிழ்நாட்டை சேர்ந்த வீரர்கள் யாரும் இடம்பெறவில்லை. இது பெரும விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தது.

# அயோத்தியில் அதிகரிக்கும் வேலை வாய்ப்புக்கள்!





ராமர் கோயில் பிரதிஷ்டையைத் தொடர்ந்து, அயோர்த்தியில் தொழில் மற்றும் வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

கருவறையில் மூலவர் ஸ்ரீபாலராமர் சிலை கடந்த 22 ஆம் திகதியன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. பிரதமர் மோடி முன்னிலையில் நடைபெற்ற பிரதிஷ்டை நிகழ்வில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறப்பு அழைப்பாளர்கள் பங்கேற்றனர்.

ஸ்ரீ பாலராமார் பிரதிஷ்டை நிகழ்வைத் தொடர்ந்து, தரிசனத்துக்காக கடந்த 23 ஆம் திகதி முதல் பக்தர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், வார இறுதியில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 20 லட்சத்துக்கு மேல் பக்தர்கள் அயோத்திக்கு வந்து ராமர் கோயிலில் தரிசனம் மேற்கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் நாள்களிலும், ராமர் கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதையொட்டி, அயோத்தியில் தொழில் மற்றும் வேலை வாய்ப்புகள் பன்மடங்கு பெருகியுள்ளதால் தங்களின் வாழ்வாதாரம் உயரும் என உள்ளூர் மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக உத்தர பிரதேச மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அனில் ராஜ்பர் கூறுகையில்,

“அடுத்த 5 ஆண்டுகளில் சுற்றுலாத் துறையை மையப்படுத்தி அயோத்தியில் குறைந்தது 5 லட்சம் நேரடி அல்லது மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும். வேலைவாய்ப்புகள் மட்டுமின்றி, அயோத்தி இளைஞர்கள் பலர் தொழில்முனைவோராக மாற வாய்ப்புள்ளது.

மேலும், தேவை பெருகுவதால் சிறு வணிகர்களின் வர்த்தகம் விரிவடையும், வேலைவாய்ப்பில் உள்ளூர் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கக் கோரி, அடுத்த 2 ஆண்டுகளில் அயோத்தியில் செயல்பாட்டைத் தொடங்கவிருக்கும் 10 இற்கும் மேற்பட்ட சர்வதேச நட்சத்திர விடுதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

விரைவில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன, உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை எளிதாக்க, அயோத்தி மாநகராட்சியுடன் இணைந்து எங்கள் துறை பணியாற்றி வருகிறது.” –என்றார்.

# பிரேசிலில் விமான விபத்து: 7 பேர் பலி



பிரேசிலில் இடம்பெற்ற விமான விபத்தில் 7 பேர் பலியாகியுள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரேசிலின் அண்டை நாடான சாவ்பாலோ காம்பினாவில் இருந்து புறப்பட்ட சிறிய ரக விமானம் பிரேசிலின் தென் கிழக்கு மினாஸ்ரைசுக்கு பயணத்தை ஆரம்பித்துள்ளது.

இதன்போது பிரேசிலின் சுரங்க நகரமான இட்டா பேலா மீது விமானம் வானில் பறந்து கொண்டிருந்த போது திடீரென கட்டுப்பாட்டை இழந்து தரையில் விழுந்து நொறுங்கியுள்ளது.

இந்த கோர விபத்தில் விமானத்தில் பயணம் செய்த விமானி உள்ளிட்ட 7 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்கான காரணம் என்னவென்று தெரியாத நிலையில் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன

# காசா மக்களுக்கான நிதியுதவி இடைநிறுத்தம்: நியூசிலாந்தின் முன்னாள் பிரதமர் கவலை



பலஸ்தீன அகதிகளிற்கான ஐ.நா. அமைப்பிற்கான நிதியுதவி இடைநிறுத்தத்தை அவுஸ்ரேலியா மற்றும் மேற்கத்திய நாடுகள் கைவிடவேண்டும் எனவும் மீண்டும் நிதியுதவியை வழங்குமாறும் நியூசிலாந்தின் முன்னாள் பிரதமர் ஹெலென் கிளார்க் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யு.என்.ஆர்.டபில்யூ.ஏ அமைப்பின் உறுப்பினர்கள் ஹமாசுடன் இணைந்து இஸ்ரேலிற்கு எதிராக தாக்குதல்களை மேற்கொண்டனர் என வெளியாகியுள்ள குற்றச்சாட்டுகளை தொடர்ந்து அவுஸ்ரேலியா உட்பட 9 நாடுகள் அந்த அமைப்பிற்கான நிதிஉதவியை இடைநிறுத்தியுள்ளன.

காசாவின் மிகப்பெரிய சேவை வழங்குநராக பலஸ்தீனிய அகதிகளிற்கான ஐ.நா அமைப்பு காணப்படுவதால் அந்த அமைப்பிற்கான நிதி நிறுத்தம் காரணமாக பேரழிவு ஏற்படலாம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐ.நா. அமைப்பில் 13 ஆயிரம் பேர் பணியாற்றுகின்றனர். ஆனால் 13 பேருக்கு எதிராகவே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ள என நியூசிலாந்தின் முன்னாள் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஐ.நா. அமைப்பிற்கான உதவியை நிறுத்தும் தீர்மானம் முற்றிலும் அளவுக்குமீறிய நடவடிக்கை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களில் 9 பேர் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். ஒருவர் உயிரிழந்துவிட்டார் எனவும் இருவரை கண்டுபிடிக்கமுடியவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றச்சாட்டுகளை கையாள்வதில் ஐ.நா. மிகவும் தாமதமாக செயற்பட்டதன் காரணமாகவே அவுஸ்ரேலியா, அமெரிக்கா உட்பட நாடுகள் உதவிகளை நிறுத்தியுள்ளமை கூட்டு தண்டனை போல தோன்றுகின்றது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஐ.நா அமைப்பினை நிதி அடிப்படையில் முடக்கினால் காசாவில் வசிக்கும் குடும்பங்களிற்கு அது பெருந்தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் நியூசிலாந்தின் முன்னாள் பிரதமர் தெரிவித்துள்ளார்.

# ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் புடின் மீண்டும் போட்டியிடுகிறார்



ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக தனது பெயரை விளாடிமிர் புடின் பதிவு செய்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி, இந்த ஆண்டு நடைபெறும் தேர்தலில், புடினுக்கு வெற்றியை இலகுவில் தனதாக்கிக் கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் கடந்த 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு அதிகாரப்பூர்வ ஜனாதிபதியாக விளாடிமிர் புடின் பதவியேற்றார்.

இந்த நிலையில், அவரது தற்போதைய பதவிக்காலம் எதிர்வரும் மே மாதம் நிறைவடையவுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு, ரஷ்ய நாடாளுமன்ற மேல் சபை கூட்டத்தில், ஜனாதிபதி தேர்தலை 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி நடத்துவது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதையடுத்து, தனது கட்சி சார்பில் மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக தன் பெயரை மத்திய தேர்தல் கமிஷனில் அவர் பதிவு செய்துள்ளார்.

இந்த தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியானால், எதிர்வரும் 2036 ஆம் ஆண்டு வரை விளாடிமிர் புடின், ஜனாதிபதி பதவியில் நீடிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சோமாலியக் கடற்கொள்ளையர்களிடம் சிக்கிய 6 இலங்கை மீனவர்களும் மீட்பு

அரபிக்கடலில் காணாமல் போன "லொரன்சோ புத்தா 4" படகு சீசெல்ஸ் கடலோர பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டதாக இலங்கை அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை சீசெல்ஸ் கரையோரப் பாதுகாப்புப் படையினர் நேற்று பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்கவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தனர்.

ஆழ்கடல் மீன்பிடிப் படகான "லொரன்சோ புதா 4" கடந்த ஜனவரி 12 ஆம் திகதி 06 மீனவர்களுடன் திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்திலிருந்து தனது முதல் பயணத்தை ஆரம்பித்தது.

பின்னர் கரையில் இருந்து 1,160 கடல் மைல் தொலைவில் உள்ள அரபிக் கடலில் சோமாலிய கடற்கொள்ளையர்களால் இந்தப் படகு கைப்பற்றப்பட்டதாக மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டது.

இதன்படி, காணாமல் போன படகு தொடர்பில் தேடிப்பார்க்குமாறு இலங்கை கடற்படையினர் பஹ்ரைனில் அமைந்துள்ள 40 நாடுகளை உள்ளடக்கிய கூட்டு கடல் படையணிக்கு அறிவித்தனர்.

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகைக் கண்டுபிடிக்க சீசெல்ஸ் கரையோரப் பாதுகாப்புப் படை விசேட தேடுதல் நடவடிக்கையைத் தொடங்கியது. சோமாலிய கடற்கொள்ளையர்களின் பிடியில் இருந்த படகை அவர்கள் கண்டுபிடித்தனர். அத்துடன், இரண்டு சோமாலிய கடற்கொள்ளையர்களும் சீசெல்ஸ் கரையோரப் பாதுகாப்புப் படையினால் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், "லொரன்சோ புத்தா4" ஆழ்கடல் மீன்பிடிப் படகில் இருந்த 06 மீனவர்களும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர் என்சவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சோமாலியக் கடற்கொள்ளையர்களினால் கடத்தப்பட்ட ஆழ்கடல் மீன்பிடிப் படகை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான பணிகள், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது குறித்த படகு சீசெல்ஸில் உள்ள விக்டோரியா துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# 60 வயதுப் பெண் மீது பாலியல் துஷ்பிரயோகம் கேட்கச் சென்ற சகோதரியின் மீது தாக்குதல்!

மீரிகம பிரதேசத்தில் அறுபது வயதுப் பெண்ணைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியவர் எனக் கூறப்படும் சந்தேக நபரிடம் அது குறித்து விசாரித்து நியாயம் கேட்கச் சென்ற அப்பெண்ணின் சகோதரியை அந்நபர் தடியால் தாக்கி காயப்படுத்தினார் என்க கூறப்படுகின்றது. 65 வயதுடைய வாகன சாரதியான அந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி 60 வயது பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் இது தொடர்பில் வெளிப்படுத்தாத பட்சத்தில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் தனது சகோதரியிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சந்தேக நபரிடம் விசாரிக்கச் சென்ற சகோதரியை குறித்த நபர் தடியால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட சகோதரி பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு இது தொடர்பில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட 60 வயதுடைய பெண் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீரிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பொதுச் செயலாளர் பதவி இழுபறியினால் சு.கவின் கூட்டணியை அறிவிப்பது தாமதம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பதவி தொடர்பான இழுபறி நிலை காரணமாகவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசியல் கூட்டணியை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பதவி தொடர்பில் அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் முன்னாள் பிரதியமைச்சர் திலங்க சுமதிபால இடையில் மோதல் நிலவி வருகிறது. இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கொன்றும் நிலுவையில் உள்ளது.

இந்த நிலைமை காரணமாக இரண்டு பேரும் பதவி விலகல் கடிதங்களை வழங்கி, பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன இருவரிடமும் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியை தற்போது அரசாங்கத்திற்கு ஆதரவளித்து வரும் சுதந்திரக்கட்சியின் அணியை சேர்ந்த எவருக்கும் வழங்கப் போவதில்லை என மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.



# தன் சகோதரனின் 10 வயது மகளை கெடுத்தவருக்கு 50 வருடச் சிறை!

## கண்டி மேல்நீதிமன்றம் உத்தரவு

தனது சொந்த சகோதரனின் பத்து வயது மகளை கடுமையாக பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டு தொடர்பில் கண்டி மேல் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட மூன்று தனித்தனி குற்றச்சாட்டுகளின் கீழ் சந்தேக நபருக்கு ஐம்பது வருட கடூழிய சிறை தண்டனை வித்தித்து கண்டி மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது .

இதன்படி, இந்த விடயம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட தனிதனி குற்றச்சாட்டுகளின் முதல் மற்றும் இரண்டாவது குற்றச்சாட்டுகளுக்கு இருபது வருடங்களும், மூன்றாவது குற்றச்சாட்டிற்கு பத்து வருடமுமாக ஐம்பது வருட சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு பத்து லட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறும், முன்வைக்கப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளுக்கு தனித்தனியாக பதினைந்தாயிரம் ரூபாய் அபராதம் செலுத்துமாறும், அதனை செலுத்த தவறினால் மேலும் ஆறு மாத சிறைத்தண்டனை விதித்தும் நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டுள்ளது.



# மட்டக்களப்பில் டிப்ளோமா கற்கைகளை நிறைவு செய்த மாணவருக்கு கௌரவம்

**(பழுவூரான்)**

ஐ.டி.எம். நிறுவனத்தில் டிப்ளோமா கற்கைகளை நிறைவு செய்த மாண வர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நிறுவனத்தின் பணிப்பாளர் ரி.சசிகுமார் தலைமையில் மட்டக்களப்பு தனியார் விடுதியில் நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து சிறப்பித்தார்.

ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில் நுட்பத்தில் டிப்ளோமா கற்றை நெறி யைப் பூர்த்தி செய்த மாணவ, மாணவி கள் இதன் போது அதிதிகளினால் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக் கப்பட்டனர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த அரசாங்க அதிபர் மாவட்டத்தில் மாண வர்களின் கற்றல் நடவடிக்கையை மேம் படுத்த புதிய கற்கை நெறிகளையும் அறிமுகப்படுத்த வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக் கழகப் பேராசிரியர் கே.ரீ.சுந்தரேசன், மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலக திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சுபாகரன், மாணவர்களின் பெற்றார்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






















# மன்னார் திட்டமிடல் பணிப்பாளராக எச்.ஹலிம்தீன் நேற்று பதவியேற்றார்

**(ந.லோகதயாளன்)**

மன்னார் மாவட்டச் செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளராக இலங்கை திட்டமிடல் சேவையைச் சேர்ந்த எச். ஹலிம்தீன் மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் முன்னிலையில் நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

மாவட்ட செயலகத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராக பணியாற்றிய நிலையில் நேற்று முதல் திட்டமிடல் பணிப்பாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த பதவியேற்பு நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலாளர்கள் (நிர்வாகம் மற்றும் காணி), பிரதம கணக்காளர், பிரதம உள்ளக கணக்காய்வாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர் மற்றும் திட்டமிடல் கிளையின் அனைத்து உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.







# மாணவரிடையே அதிகரிக்கும் போதைப் பழக்கம் தடுப்பதில் பெற்றோருக்குத்தான் பெரும்பொறுப்பு

## சுட்டிக்காட்டுகின்றார் ஐங்கரநேசன்



பாடசாலைகளில்படையினர்போதைப் பொருள் சோதனைகளை மேற்கொள்ளும் அளவுக்கு மாணவர்களிடையே என்றுமில்லாதவாறு போதைப்பொருள்களின் பாவனை அதிகரித்திருக்கிறது. போதைப்பொருள் பாவனையாளர்களைப் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்புகின்ற இராணுவப்பாணி நடவடிக்கைகளையே அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் போதைப்பொருள் பழக்கத்திற்கு ஆளாகுவதைத் தடுக்க முடியாது. மாணவர்களிடையே போதைப் பழக்கம் ஏற்படுவதைத் தடுப்பதில் படைத்தரப்பு, ஆசிரியர்கள் எல்லோரையும் விடப் பெற்றோருக்கே பெரும் பொறுப்பு உண்டு என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை நாவற்குழியில் இடம் பெற்றது. மாணவர்களும் பெற்றோர்களும் கலந்துகொண்ட இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

இலங்கை அரசாங்கம் இப்போது மேற்கொண்டுள்ள போதைப்பொருளுக்கு எதிரான யுக்திய நடவடிக்கையால் போதைப்பாவனையை நாட்டிலிருந்து முற்றாக ஒழித்துவிடமுடியாது. பெரும் வலைப் பின்னலாக இயங்கிக்கொண்டிருக்கும் போதை வியாபாரத்தில் சிக்கிவருவது கடத்தல்காரர்களும் சில்லறை வியாபாரிகளும் போதைப்பொருள் பாவனையாளர்களும் மாத்திரம்தாம். இதில் ஈடுபட்டுள்ள பெரும் முதலாளிகள் அரசஉயர்மட்டங்களின் ஆசீர்வாதத்தோடு பாதுகாப்பாகத்தான் உள்ளார்கள். உறங்கு நிலையில் இருக்கும் இவர்கள் விரைவிலேயே மீள எழுவார்கள்.

கஞ்சாவும் ஹெரோயினும் மாத்திரம் தான் போதைப்பொருள் அல்ல. கைவிட முடியாத எல்லாப் பழக்கங்களுமே போதைதான். கைவிடமுடியாத அளவுக்கு புகைப்பிடிப்பதும், மது அருந்துவதும், நேரகாலம் பாராது தொலைக் காட்சித் தொடர்களில் மூழ்கிக் கிடப்பதும், இரவில் படுக்கைக்குச் செல்லும் போதும் கைப்பேசிகளுடனேயே செல்வதும் போதைதான்.

பிள்ளைகள் தங்கள் ஆதர்ச வழிகாட்டிகளாக முதலில் பெற்றோர்களையே ஏற்றுக்கொள்கிறார்கள். போதைப் பழக்கங்களுக்கு ஆளாகியுள்ள பெற்றோர்களால் ஒருபோதும் தங்கள் பிள்ளைகளுக்கு வழிகாட்ட இயலாது. பிள்ளைகள் தவறிழைக்கும்போது தட்டிக்கேட்கவும் முடியாது.

பெற்றோர்கள் பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் பிள்ளைகளை அனுப்பிவைப்பதுடன் தங்கள் கடமைகள் முடிந்துவிட்டதாக நினைக்கிறார்கள்.

முழுநாட்டையுமே போதைப்பொருள் பாவனை ஒரு புற்றுநோயாகப் பீடித்து வரும் நிலையில் எமது பிள்ளைகள் பெற்றோர்களால் கண்டிப்பாகக் கண்காணிக்கப்படவேண்டும். அவர்களுடைய நண்பர்கள் தொடர்பாகப் பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டும். போதைப் பொருள் பாவனை ஒருவழிப்பாதை போன்றது. இதில் ஒருதடவை பிரவேசித்தால்மாணவர்களால்திரும்பிவரமுடியாது என்பதைப் பெற்றோர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். – என்றும் தெரிவித்தார்.

# சிறை அலுவலரின் அடாவடி சிவிலியன் மீது கத்திக் குத்து

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சியில் இருந்து யாழ் நோக்கி வந்த பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநருடன் தர்க்கத்தில் ஈடுபட்ட யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகஸ்தரை ஒருவர் தடுத்து நிறுத்தினார் என்று கூறப்படுகின்றது. அதற்காக அந்த நபரை சிறைச்சாலை உத்தியோகத்தர் ரவுடிக் கும்பலை வைத்து கத்தியால் குத்திக் காயப்படுத்தியிருக்கின்றார். காயமடைந்தவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து நேற்று முன்தினம்மாலை யாழ் நோக்கிப் பயணித்த பஸ் இடைவழியில் பழுதடைந்துள்ளது. இதனை சரிசெய்ய சாரதியும் நடத்துநரும் முயன்ற சமயம் பஸ்ஸில் பயணித்த யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் சாரதி மற்றும் நடத்துநருடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

அப்போது பஸ்ஸில் பயணித்த மற்றுமோர் பயணி வாகனப் பழுது வேண்டுமென்றே ஏற்படுவதில்லை, அதனைப் பொறுத்துக்கொள்ளப் பழக வேண்டுமே அன்றி, இவ்வாறு சச்சரவில் ஈடுபட்டு ஏனையோருக்கும் இடையூறு ஏற்படுத்தக் கூடாது எனக் கூறியிருக்கின்றார். இதனால் சிறைச்சாலை உத்தியோகத்தருக்கும் அவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து மணியந்தோட்டத்தில் வசிக்கும் சிறைச்சாலை உத்தியோகத்தர் தொலைபேசியில் சிலரை அழைத்து தான் இறங்கும் சமயம் தன்னுடன தர்க்கத்தில் ஈடுபட்டவரை கத்தியால் குத்தி தாக்கச் செய்திருக்கின்றார்.

கத்திக் குத்திற்கு இலக்கானவர் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தன்னை இந்த சர்ச்சை காரணமாகவே கத்தியால் குத்தினர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# மெதடிஸ்த திருச்சபையின் வட, கிழக்கு அவைத்தலைவர்

## அருள்திரு சுபேந்திரன் பதவியேற்பு

(ந.லோகதயாளன்)

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் 14 ஆவது வடக்கு - கிழக்கு திருமாவட்ட அவைத் தலைவராக அருள்திரு அருளானந்தம் சாமுவேல் சுபேந்திரன் நியமனம் பெறும் வழிபாட்டு நிகழ்வின்போத. அவர் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

மெதடிஸ்த திருச்சபையின் திருப்பேரவை தலைவர் அருள்திரு டபிள்யூ. பீ.எபநேசர் ஜோசப்பினால் நியமிக்கப்பட்டமையைத் தொடர்ந்து சத்திய பிரமாண நிகழ்வு புளியந்தீவு மெதடிஸ்த தேவாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின்போது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன், வட கிழக்கு திருமாவட்ட அவை உறுப்பினர்கள், திருப்பணியாளர்கள், போதகர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

1994 ஆம் ஆண்டில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் திருப்பேரவையில் இணைந்து குருவாக, முகாமைக்குருவானவராக, வடக்கு – கிழக்கு திருமாவட்ட அவை செயலாளராக எனப் பல பொறுப்புக்களில் இறைபணியை மேற்கொண்டவர் இவர்.

தற்போது இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் 14 ஆவது வடக்கு கிழக்கு திருமாவட்ட அவை தலைவராக நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# இன்றைய ராசி பலன்கள் - 30.01.2024




இன்று மிகுந்த உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். உங்கள் நேர்மையான முயற்சி மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொள்வீர்கள். விரைந்து முடிவெடுப்பீர்கள்.

பணியை மகிழ்ச்சியுடன் விரும்பி செய்வீர்கள். சுய வளர்ச்சியின் மூலம் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். அதிர்ஷ்டத்தை மட்டும் நம்பாமல் கடினமாக உழைப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் இணைந்திருந்து மகிழ்வீர்கள். இனிமையான வாரத்தைகளை மென்மையாக பேசி இருவரும் நல்ல புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் காரணமாக ஊக்கத்தொகை அல்லது சலுகைகள் வகையல் பண வரவு காணப்படும். உங்கள் பணியில் நேர்மையாக இருப்பீர்கள்.

இன்று சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக் காது. தவறான விளைவுகள் ஏற்படாமல் இருக்க எந்த ஒரு செயலையும் செய் வதற்கு முன் யோசித்து செய்ய வேண்டும். பிறரோடு உரையாடும் போது வார்த்தை களில் கவனம் தேவை.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில ஏமாற்றங்களையும் தடைகளையும் சந்திக்க நேரும். சகபணியாளர்களுடனான பேச்சுவார்த்தை சுமுகமாக இருக்காது.

துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உரையாடும் போதும் கருத்துக்களை பகிர்ந்துகொள்ளும் போதும் அமைதியாக அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று ஏற்படும் செலவுகளை நீங்கள் தவிர்க்க முடியாது. என்றாலும் செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது. தேவையற்ற செலவினங்கள் ஏற்படலாம்.




இன்று தடைகள் நிறைந்து காணப்படும். அது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். கடினமான சூழ்நிலை இருந்தாலும் அதனை லேசாக எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும். வெறுமையை உணர்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடச்சூழல் சுமுகமாக இருக்காது. உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவதில் சில தாமதங்கள் காணப்படும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு இருப்பதை சிறிதளவு வெளிப்படுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் அவசியம். உங்கள் துணையிடம் நகைச்சுவையான அணுகுமுறை தேவை.

இன்று அதிக பண வரவிற்கான வாய்ப்புகள் குறைவு. செலவுகள் குவிந்து கானபபடும்.




இன்று ஆக்கபூர்வமான நாளாக இருக்கும். நண்பர்களால் பயன் அடைந்து மகிழ்வீர்கள். உற்சாகமாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரி களின் ஆதரவை பெறுவீர்கள். உங்கள் செயல்திறனில் மிகுந்த திருப்தி காண்பீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.சிறப்பானநாள். இன்று புத்துணர்ச்சியோடு காணப்படுவீர்கள். நல்ல தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். நீங்கள் இருவரும் புதிய மனிதர்களை சந்திப்பீர்கள்.

இன்று பணவரவு மகிழ்ச்சியை அளிக்கும். பயனுள்ள சொத்துக்களை வாங்குவதில் உங்கள் பணத்தை முதலீடு செய்வீர்கள்.




இன்று அமைதியின்மை காணப் படும். இன்றைய செயல்களை நன்றாக சிந்தித்து கவனமுடன் முடிவெடுத்து செய்ய வேண்டும். இன்றைய சவால் களை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டும். நேர்மறை எண்ணத்தை பராமரிக்க வேண்டும்.

பணியில் உங்கள் முன்னேற்றம் அதிக அளவில் காணப்படாது.பணிச்சுமை அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு கொள்ள மாட்டீர்கள். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் உங்கள் துணையுடன் சிறந்த தருணங்களை பகிர்ந்து கொள்ளலாம்.

சம்பாதிக்கும் வாய்ப்பு குறைவு. நீங்கள் இன்று எதிர் பார்த்த அளவிற்கு பணம் சம்பாதிக்க இயலாது.




மோதல்களைத் தவிர்க்க அறி முகம் இல்லாத நபர்கள் மற்றும் அக்கம் பக்கத்தினருடன் கவனமாகப் பழக வேண்டும். மற்றவர்களுடன் பேசும் போது கவனம் தேவை.

பணியிடச்சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சரியாக திட்டமிட்டு அதனை முறையாக ஆற்றுவது சிறந்தது.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையுடன் இன்று மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள முடியாது.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று தேவையற்ற செலவுகளை சந்திக்க நேரலாம். போதிய அளவு பணம் சம்பாதிக்க இயலாது.

உயரமுத்த பாதிப்பு காணப்படும். இதனால் சிறிது சோர்ந்து காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் சற்று மந்தமாக இருக்கும். நம்பிக்கையுடன் நேர்மறை எண்ணத்தோடு இருந்தால் இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி காண லாம்.

பணியில் ஏமாற்றமான சூழ்நிலை காணப்படும். பணியிடச்சூழல் சுமுகமாக இருக்காது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். மிகுந்த பொறுமை தேவை.

நீங்கள் எந்தவொரு விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வதன் காரணமாக உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும். உங்கள் துணையுடன் ஆரோக்கிய மான உறவை பராமரிக்க அமைதியாக சகஜமாக இருக்க வேண்டும். உங்கள் துணையிடம் பொறுமையையும் அன்பையும் வெளிப்படுத்த வேண்டும்.

இன்று தேவையற்ற செலவுகள் செய்ய நேரும்.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் சமயோசித புத்தியால் இன்றைய நாளை உற்சாகமாக்குவீர்கள்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரி களிடமிருந்து எதிர்பாராத அனுகூலங்கள் கிடைக்கப் பெறுவீர்கள். சாதனை படைத்த உணர்வு மனதில் நிரம்பி யிருக்கும்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வை பகிர்ந்துகொள்வீர்கள். இதன் மூலம் அவர் மகிழ்ச்சி யடைந்து உறவில் ஒரு நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்தியாக இருக்கும். உங்கள் சேமிப்பை உயர்த்த முடியும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.01.2024




இன்று அனைத்தும் சுமுகமாக நடக்கும். உங்கள் சொந்த முடிவுகளை எடுப்பதில் இன்று உறுதியாக இருப்பீர்கள். உங்கள் இலக்குகளில் வெற்றி பெறுவீர்கள்.

பணிச்சூழல் சிறப்பாக காணப்படும். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். புதிய வாய்ப்புகள் பெருகி காணப்படும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

உங்கள் சம்பாதிக்கும் திறனை உயர்த்த முடியும். கணிசமான தொகை சம்பாதிக்க அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள். இன்று நற்பலன் காண உறுதியாக இருக்க வேண்டும். உங்கள் வளர்ச்சிக்கான பாதையில் தடைகளை சந்திக்க நேரும்.முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை திட்டமிட்டு முறையாக ஒழுங்கமைத்து ஆற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இதனை தவிர்த்து அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண நஷ்டம் காணப்படுகின்றது. பயணத்தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று ஆரோக்கிய பிரச்சினை காணப்படும். கால் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று மன உளைச்சல் காணப்படும். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம். பிரச்சினைகளைக் கையாள்வ–தற்கு இது உதவும். வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

பணிகளைக் கையாளும்போது கவனமுடன் இருந்தால் விரும்பிய பலன்கள் கிடைக்கும். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் நகைச்சுவையோடு பேசுவீர்கள். தேவையற்ற வார்த்தைகள் பேச வாய்ப்புள்ளது. இது உறவை பாதிக்கும். எனவே கவனமாகப் பேச வேண்டும்.

இன்று பண நஷ்டம் காணப்படுகின்றது. இன்று பணம் சம்பாதிப்பதற்கான ஏதுவான சூழ்நிலை இல்லை. செலவுகள் காணப்படும்.




இன்று தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். இதனால் மகிழ்ச்சி ஏற்படும். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். அதன் மூலம் நல்ல பலன் கிடைக்கும்

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே உறவு வலுப்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும் புதிய முதலீடுகளில் பங்கு கொள்ளலாம்.அதனால் உங்கள் நோக்கம் நிறைவேறும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். இதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் நன்கு பராமரிப்பீர்கள்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# அரிசியில் தன்னிறைவு பெற்றுள்ளதால் இனி இறக்குமதி செய்யப்படமாட்டாது

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



"அரிசி தேவையில் இலங்கை தன்னிறைவு பெற்றுள்ளதால், இந்த வருடத்தில் அரிசியை இறக்குமதி செய்ய எதிர்பார்க்கவில்லை. 2024 ஆம் ஆண்டில் இலங்கை தன்னிறைவடையும் வகையில், நெல், சோளம், உருளைக்கிழங்கு மற்றும் மிளகாய் பயிர்களுக்கு முன்னுரிமை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது."

– இவ்வாறு விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு என்ற வகையில், இந்த ஆண்டு விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அபிவிருத்திக்கான இலக்கை நோக்கிய வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

2023ஆம் ஆண்டில், நாட்டில் சிறு போகத்திலும் பெரும் போகத்திலும் உரங்களை கொள்வனவு செய்வதற்கு நிதி மானியங்களுக்காக சுமார் 22 பில்லியன் ரூபாவை செலவிட்டோம்.

அத்துடன் நெல் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் 13 பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.

அதன்படி, 2022ஆம் ஆண்டு 8 மெட்ரிக் டன் அரிசி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட போதிலும், 2023ஆம் ஆண்டு அரிசி இறக்குமதி செய்யப்படவில்லை.

நம்நாட்டு விவசாயிகள் உற்பத்தி செய்த அரிசியை இந்த நாட்டு மக்கள் வருடம் முழுவதும் உட்கொண்டார்கள் என்றே கூற வேண்டும்.

நெருக்கடியான நிலையிலும், அரிசியில் தன்னிறைவு பெற்றுள்ளதால், இந்த ஆண்டு அரிசியை இறக்குமதி செய்ய எதிர்பார்க்கவில்லை.

கடந்த ஆண்டைப் போலவே வறட்சி மற்றும் வெள்ளத்தால் நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டது.

வறட்சியால் 65,000 ஏக்கரும், கனமழையால் ஒரு லட்சம் ஏக்கரும் சேதமடைந்துள்ளன.

வறட்சியினால் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு இழப்பீடு வழங்க அரசாங்கம் 1,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

சுமார் 700 மில்லியன் ரூபாய் ஏற்கனவே இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது." – என்றார்.



## முப்பது வீதமான குழந்தைகள் முன்பள்ளிக்குச் செல்வதில்லை

### கல்வி அமைச்சர் தகவல்

நாட்டில் 4 வயதுடைய குழந்தைகளில் 30 வீதமானோர் முன்பள்ளிக்கு செல்வதில்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஆரம்பகால குழந்தை பருவ வளர்ச்சி மிகவும் முக்கியமானது எனவும், உலகில் இது குறித்து அதிக கவனம் செலுத்தப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சுமார் 6 ஆயிரம் முன்பள்ளி டிப்ளோமாதாரிகள் இருகின்றனர் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சுட்டிக்காட்டினார்.



## சமூக செயற்பாட்டாளர் பியத் நிகேஷல கைது!

சமூக செயற்பாட்டாளரான பியத் நிகேஷல குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணை பிரிவினால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

வாக்குமூலமொன்றை பெற்றுக் கொள்வதற்காக அவர் நேற்றுப் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். அவர் வாக்குமூலம் பெறப்பட்ட தன் பின்னர் கைது செய்யப்பட்டார்.

பொதுமக்களின் அமைதியை சீர்குலைத்தமை, அரசாங்கத்தின் மீது பொதுமக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியமை மற்றும் பொதுமக்களை ஆத்திரமடையச் செய்யும் வகையில் காணொலிகளையும் வெளியிட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் பியத் நிகேஷல கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பியத் நிகேஷல இன்று நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார்.